# ஈழத்துப் பெண் கவிதைகளில் உணர்த்துமுறை உத்திகள்- ஓர் ஆய்வு

**கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தன்**
**முதுநிலை விரிவுரையாளர்**
**ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்**
**இலங்கை**

முன்னுரை

தமிழ்க் கவிதைப் பெரும் புலத்தில் ஈழத்துப் பெண்கவிதைகளுக்கு தவிர்க்க முடியாததொரு தனியிடம் உளது. 'பெண் சிந்தனைகள்'' கவிமொழியாக நவீன மற்றும் புதுக்கவிதை வெளியில் ஈழத்துத் தொகுப்பினாலேதான் முதன்முதலாகப் பதிவுபெற்றன. 'சொல்லாத சேதிகள்'' தொடக்கி வைத்த அந்நெடும் பயணத்தில் காலத்திற்குக் காலம் தமது இருப்பின் நிலை சுதந்திர வேட்கைதாம் வாழும் சமுதாயத்தின் சிக்கல்கள் தீர்வுகள் எனப் பாடிய பெண்கவிகள் பலர். தமக்கென 'பெண்மொழியை''க் கண்டடைந்த அவர்கள் பேசாப் பொருள்களைப் பேச விழைந்து வெளிப்படையாகவும் சிலவேளை பூடகமாகவும் படைப்புகளை நல்கியுள்ளனர். இப்படைப்புகளில் தாம் கூறவந்தவைகளை வாசக உளத்திற்குப் பரிமாற்றம் செய்வதற்கென அவர்கள் கையாண்ட உத்திகள் பலப்பல. அவ் உணர்த்துமுறை குறித்த உத்திகளை ஈழத்துப் பெண் கவிதைகளை முன்வைத்து ஆராய்கின்றது இந்த ஆய்வுக் கட்டுரை.

**நான் - நீ**

'நான் - நீ'' எனும் இருமை மொழிதற் கோட்பாட்டில் முக்கியமானது. இவ்விருமையில் 'நீ'' என ஆணை முன்னிறுத்திப் பேசுகின்ற உத்தி தொடக்ககால ஈழப் பெண்கவிதைகளின் பெருநெறியாக உள்ளது. கணவனாகிய - காதலனாகிய ஆணிடம் சொல்லாத அல்லது சொல்ல முடியாத சேதியை கவிதாயினிகள் 'நீ'' என அந்த ஆணை முன்னிலைப்படுத்திப் பேசிவிடுகின்றனர். இவர்கள் படைப்புகளில் நீ-ஆண் நீங்கள்-ஆண்கள் என பெரும்பான்மையும் ஆண்வர்க்கம் முன்னிலையாகின்றது. இந்த ஆணை தமது செய்தியை வெளிப்படுத்துதற்கு ஏற்ற வகையிலே தாமே வடிவமைத்துக்கொள்ளும் பெண்கவிகள் தம் கவிதைகளுக்கு வேறு அழகியல் உணர்த்துமுறைகள் தேடி அலையவில்லை. இதனாலேதான்தொடக்ககால ஈழத்துப் பெண்கவிதைகள் அனைத்துமே பெரும்பாலும் நேரடியான தன்மையுடையனவாய் முன்னிலை மொழிதல் உத்தியில் எழுதப்பெற்றன.

'நீ திறந்த பாதையை
நான் கண்டிருந்தாலாவது அவர்களுக்குக்
காட்டியிருப்பேன்.
என்
கால்களைக் கட்டிவிட்டாய்
அவிழ்த்து விட்டாலாவது
கால் போன போக்கில்
நடந்தாலும் திரிந்திருப்பேன்'' 1
'என்ன பேசேன்''
என்று நீ கேட்டும்

'ஊம்" என்பது மட்டுமே
எனது பதிலாகி நிற்க
உள்ளும் புறமும்
எல்லை கடந்த ஏகாந்தப் பெருவெளியும்
ஓசைகளடங்கி உறைந்து போக
அத்தனைக்குமாக நீயே
திரும்பத் திரும்பப் பேசுவாய்" 2

போன்ற கவிதைகள் பலவற்றை இதற்கான எடுத்துக்காட்டுகளாக நிறுத்தமுடியும்.

எப்படி பெண்ணின் புனைபெயரில் மறைந்தும் மறையாமலும் ஆண்கவிகள் 'பெண்ணாய்க் கவிதை" செய்கின்றார்களோ அவ்வாறு மேலே காட்டப்பட்ட மொழிதலுக்கும் மறுதலையாக 'நான்" என்று தன்னை ஆணாகப் பேசும் பெண்களின் கவிகளும் புறநடையாக ஒன்றிரண்டு உள. ஆயினும் அவற்றினதும் நோக்கம் ஒன்றுதான்.

'நான் ஆண்
ஆண் என்பதால்
ஆற்றல் உள்ளவன்.
அனைத்தும் அறிபவன்
குற்றம் செய்ய முடியாதவன்.
நீ யார்?
வெறும் பெண்" 3

இங்கு பெண்கவிஞர் தன்னை ஆணாக பாவனை செய்து எவ்வாறெல்லாம் பெண்ணை அவன் அடக்குகின்றான் எனச் சுட்ட விழைகிறார். ஆணின் மேலாதிக்கத்தையும் ஆணவத்தையும் ஆண்கூற்றாகவே எடுத்துக்காட்டி பெண்ணடிமைத்தனத்தை உணர்த்தும் ஒரு உத்திதான் இது எனலாம்.

'நான் - நீ" இருமை அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் பெண்-ஆணைத்தான் குறிக்கிறதெனக் கொள்ளமுடியாது. சிலநேரங்களில் இன்னும் விழிப்புணராத சக தோழியையும் 'நீ" முன்னிலைப்படுத்துகிறது. இவ்வாறு விழிப்புணராத பெண்ணை நீயாகக்கருதி தம் சுதந்திர நிலையுரைக்கின்றனர் பெண்கவிஞர்கள் சிலர். அதாவது தனையுணராது தொடர்ந்தும் அடிமையென இருக்கும் சக பெண்ணும் இவர்கள் கவிதைகளில் முன்னிலையாகின்றாள்.

'அடுக்களை அரசி"
'கற்புத்தெய்வம்"
'மெல்லியவள்" ……
எல்லாம் வெறும் கனவுப்
பொன்விலங்குகள்….
விரைவில் விழித்தெழு
நிஜத்தை எதிர்கொள்!
நின் பங்களிப்பைச் செய்" 4

என்று அழைக்கிறதொரு பெண்கவிதை.

சில இடங்களில் 'நீ" என்பது மகளைக் குறிக்கிறது. அதாவது அடுத்த தலைமுறையின் பெண் பிரதிநிதியைச் சுட்டுகின்றது. 'சொல்லாத சேதிகளில்" வரும் கவிதைகளில் இளம் பெண்ணைப்

பார்த்து 'நீ" வீட்டுச் சிறையிலிருந்து வெளியே வா என்கிறது பெண்கவிதை. ஆனால் இது தொடக்க காலத்தில்தான். பின் மாறிவிடுகிறது நிலைமை.

'கூண்டின் கதவுகள் எப்போதுமே
திறந்துதான் இருந்தது.
உன் தேவைகளைத் தீர்த்திட
எம் வானப் பரப்பெங்கும் நீ பறப்பாய்...
உன் இனத்தை அழிக்கவே
அவர்கள் அம்புகளுடன் காத்திருக்கிறார்கள்...
இந்தக் கூட்டின் மடியில்
விடுதலைப் பாடல் ஒலிக்கும் வரை
நீ என்னோடு இரு" 5

மூன்று தசாப்த இடைவெளியில் அதே 'நீ" யை பார்த்து 'வெளியே செல்லாதே என்னோடு இரு" என்று கேட்கிறது மூத்த தலைமுறைப் பெண்குரல். தம்மின ஆடவரிடமிருந்து 'சுயம்" அவாவிப் பறந்த நிலைபோய் போரின் ஒரு கொடிய முகமாய் பேரினவாதப் பூதம் பெண்பறவைகளைக் குதறுகின்ற கெடுகாலம் வந்துவிட்டமையே இம்மாற்றத்தின் காரணம் எனலாம்.

**உவமை உருவகம் படிமம்**

தமது இன எதிர்ப்பாலாரின் கட்டுக்களை உதறிப் பறந்த நிலையைத் தொட்ட பெண்குரல்கள் பின் பேரினவாதத்தின் அடக்குமுறைக்கு எதிரான குரல்களாகவும் பரிமாணங்காட்டின. பேரினவாத ஆணிடம் துப்பாக்கி ஆயுதமும் கூடவே ஆண்குறி ஆயுதமும் இருந்தன. ஒரு சிறுபான்மை இனப் பிரதிநிதியாக துப்பாக்கியால் பயமுறுத்தப்பட்ட அதேவேளை பெண் பிரதிநிதியாக ஆண்குறியாலும் வெருட்டப்பட்டாள். இதனால் பேரினவாத இராணுவனுக்கு எதிரான பெண் கவிதைகளில் சிறுபான்மை இன மகளை அடிமைப்படுத்தும் இன அடக்குமுறைக்கு எதிரான குரலும் பெண்பாலினத்தாரை கொடுமைப்படுத்தும் பாலடக்குமுறைக்கு எதிரான குரலும் புதிய கலவையில் சங்கமிக்கின்றன. இந்த எதிர்ப்பின் இருமை நிலை ஈழத்துக் கவிதைப் பரப்பிற்கு புதிய முகத்தை வழங்கியது. இது தமிழ்நாட்டுப் பெண்கவிதைகளில் இருந்து ஈழத்துப் பெண் கவிதைகளை வேறுபடுத்துமொரு தன்மைப்பாடு என்பதையும் சுட்டுதல் தகும்.

தொடக்கத்தில் கணவன் - காதலன் என தன்னினத்துப் பாலினத் துணைக்கு எதிரான செய்திகளைத் தாங்கிவந்த பெண் கவிகள் பின் தமிழர்கள் மீது இனக் குரோதத்தைக் கட்டவிழ்த்துவிட்ட பேரினவாத ஆக்கிரமிப்பு ஆண்களுக்கு எதிரான குரல்களாயின. இவ்விடத்தில் தன்னினத்துப் பாலினத் துணைக்கெதிரான ஈழத்துப் பெண்ணின் எதிர்ப்புக்குரல் குறித்தும் பேரினவாத இராணுவனுக்கு எதிரான ஈழத்துப் பெண்ணின் எதிர்ப்புக்குரல் குறித்தும் கருத்துரைக்கும் பின்வரும் பகுதியொன்று கவனிப்புக்குரியது.

'புணர்ச்சிக்குப் பிறகு மூச்சாறிக் கிடக்கும் கணவனையும் தெருவில் நடக்கையில் ஈ போல் மொய்க்கும் பார்வைகளை விளாசும் காடர்களையும் பாலியல் வன்முறை வெறிச் செயல்களைச் செய்யும் இலங்கை இராணுவத்தாரையும் ஒரே கண் கொண்டு பார்த்து அவலப்

புன்னகையுடன் ஈழப் பெண்களால் கவிதை எழுத முடிகிறது" 6 என்கிறார் வ.கீதா. இவ்வாறு பொதுமைப்படுத்திச் சொல்வது எந்தளவிற்குப் பொருத்தமானதென்பது ஆய்விற்குரியது.

தமது பாலியல் துணையான ஆணின் மேலாதிக்கம் குறித்துப் பதிவுகளைத் தந்துள்ள ஈழத்துப் பெண்கவிதைகள் பலவும் மூச்சாறிக் கிடக்கும் கணவனையும் பாலியல் வன்முறை கொண்டும் அடக்கத் துடிக்கும் பேரினவாத இராணுவனையும் பெரும்பாலும் ஒரேகண் கொண்டு நோக்குவதில்லை என்பதே உண்மையாகும். இதனை ஈழத்துக் கவிதைப் புலத்தில் நெடுநாள் தடம் பதிக்கும் எவரும் இலகுவில் அறிந்துகொள்வர்.

ஒப்பீட்டுரீதியில் ஈழத்துப் பெண்கள் தமது கணவர்களையோ - துணைவர்களையோ பெரும்பாலும் எதிரிகளாக நோக்குவதில்லை. தமிழ்நாட்டோடு ஒப்பிடும்பொழுது பெண்ணுக்கு எதிரான குடும்ப அடக்குமுறை கணவனின் கொடுமை என்பன ஈழத்தமிழ்ப்புலத்தில் மிகமிக அரியனவாகும். இதற்கு ஈழத்தமிழர்களின் கல்வியறிவு வீதம் அதிகம் என்பது முதன்மையான ஒரு காரணமாகும். இன்னும் சொல்லப்போனால் கணவர்களை முன்னிலைப்படுத்தி அதிகாரத்தின் பிரதிநிதிகளாக அவர்களைக் குற்றஞ்சாட்டும் கவிதைகளை எழுதிய பெண்களில் பலரும்கூட தத்தமது கணவர்களைக் கருதி அக்கவிதைகளை எழுதியவர்கள் இல்லை. கணவர்களுடனான அவர்களது அன்புப் பிணைப்பு இறுக்கமானது. அங்கொன்றும் இங்கொன்றுமான அடக்குமுறைகளை நோக்கி அதனைப் பொதுமைப்படுத்தியும் பெண்; கோட்பாடுகளை உள்வாங்கியுமே அந்த 'அறிவார்ந்த" பெண்கள் படைப்புகளை நல்கினர்.

இந்நிலையில் ஈழப்பெண்கவிகள் தம்கவிதைகளில் மூச்சுஆறிக்கிடக்கும் கணவர்களையும்பெண்ணுடல்களைக் குண்டு வைத்துச் சிதறச் செய்யும் கயமை மிக்க பேரினவாத இராணுவர்களையும் ஒரே கண்கொண்டு பார்த்தனர் என்பதைப் பொதுப்பண்பாக உரைப்பது பொருந்தாது. இது இவ்விரு ஆண்களையும் சுட்டும் 'அழகி மன்னம்பேரிக்கும்

அவள் கோணேஸ்வரிக்கும்
புரிந்த வன்மொழியாகத்தான்
இது இருக்கும் என
அவதியாய் எட்டிக் கடந்துபோனேன்.
அன்றைய அலைச்சலும்
மனக்குமைச்சலும் கூடிய தூக்கத்தின் இடையில்
நானும் அவள்களுக்குப் புரிந்த
அதே அதே ஆழத்திணிக்கப்பட்ட பாஷையைப்
புரிந்து கொண்டேன்" 7

எனும் கவிதையை வைத்துக்கொண்டு சொல்லப்பட்டதாகவே காணப்படுகிறது. விதிவிலக்குகளை வைத்து விதிசெய்ய முடியாது. இவ்வாறு ஆண் துணையையும் பேரினவாத இராணுவனையும் பெண் கவிகள் ஒரே நிலையில் நோக்கவில்லை என்பதை தம்கவிதைகளில் அப்பெண்கவிகள் வெளிப்படுத்தியிருக்கும் உணர்த்துமுறைகளே இலகுவில் வெளிக்காட்டிவிடும். தமது கணவர்க்கு எதிரான குரலை 'நான் - நீ" எனும் உரையாடல் மொழிதல் முறைமையில் பெரும்பாலும் ஆணை முன்னிறுத்திப் பேசும் ஈழப்பெண்கவிகள் இராணுவர்க்கு எதிரான கவிதைகளில் அக்கொடிய இராணுவரை 'முன்னிலை" யாக

அழைப்பதாகப் படைக்கவிரும்பவில்லை. 'நீ'' என்றழைத்துப் பேச விழைகின்ற முன்னிலையிலே சிலவேளை ஏதேனும் உறவுநிலை தென்பட்டுவிடக்கூடும் என்பதால் பேரினவாத இராணுவரைக் குறித்த கவிதைகள் அந்த ஆண்வர்க்கத்தை முன்னிலையாக்கிப் பேசவில்லை. மாறாக அவை பெண்மீது பலாத்காரம் திணிக்கின்ற இராணுவ ஆடவனை ஓநாயாய் வல்லூறாய் அருவருத்து படர்க்கையில் உருவகிக்கின்றன. கொடிய அஃறிணைப் படிமங்களாகக் காட்டுகின்றன.

'என் தனிமையில் களிகொண்டு
வெடுக்கென
என்னில் பாய்ந்தன ஓநாய்கள்'' 8

'இந்திய வல்லூறுகள்
எம்மவரை
உயிர்வதம் செய்வதில்'' 9

'நள்ளிரவில் வல்லூறுகளின்
சுவடுகள்
கிராமத்தை வளைத்தன'' 10

என உருவகங்களாலும் படிமங்களாலும் அவர்களது அந்நியமும் கொடூரமும் பெண்களால் மீள மீள உணர்த்தப்பட்டுள்ளன.

தன் இனத்துவ பாலினத்துணையை- அவன் அடக்கிய போதும்- 'நீ '' என முன்னிலைப்படுத்திப் பேசிய பெண்களின் கவிதைகள் பேரினவாத இராணுவ ஆதிக்கத்தை முன்னிலைப்படுத்தவில்லை. அவர்கள் படர்க்கைப்புறம்தான் என்பதை கவிதைகள் நன்கு தெளிவுறுத்துகின்றன. இவற்றிலிருந்து தன் இனத்து ஆண் துணையைக் குறித்த கவிதைகளில் 'நான் - நீ'' உரையாடலைப் பொதுக் குறியீடுகளாகவும் பேரினவாத இராணுவ ஆடவன் குறித்த கவிதைகளில் ஓநாய் முதலிய கொடிய விலங்குகளை உருவகங்கள் - படிமங்களாகவும் காட்டி வெவ்வேறு உணர்த்து முறைகளைக் கையாண்டு ஈழத்தமிழ்ப் பெண்கவிதைகள் கணவனையும் இராணுவனையும் ஒரே விதமாகப் பார்த்து விமர்சிக்கவில்லை என்பதை அறிய முடிகின்றது.

ஆன்மா மனம் உடல் எல்லாமே ஆண் மைய உலகின் விருப்புக்கேற்ப இருக்கவேண்டுமென்று சமுதாயம் நிர்ப்பந்திக்கின்றது எனக் கருதும் பெண்கவிகள் எல்லா வேளைகளிலும் சகல விதத்திலும் சுயத்தை அவாவுகின்றவர்களாக விளங்குகின்றனர். அவர்களுடைய கட்டற்ற தன்மையை விளக்க சில பொருட்கள் மாறிமாறி உருவகங்களாக-படிமங்களாக அவர்கள் கவிதைகளில் உலவுகின்றன. ஒன்றுக்கும் ஒருவருக்கும் அடங்கியிராத அசைவியக்கத்தையும் விடுதலையையும் சிறகு நதி காற்று என உருவகங்களாலும் படிமங்களாலும் அவர்கள் சொல்லி நகருகின்றனர்.

தன்னைக் கண்டெடுப்பது தனது வலிமையான இருப்பைப் பேசுவது நிராகரிக்க முடியாதபடி தனது உறுதியான பிரசன்னத்தைச் சுட்டுவது என தமிழ்க்கவிதையுலகு கண்டு

கொண்ட புதிய பெண்ணின் பாடுபொருள்களுக்கேற்ப புதிய உவமங்கள் ஈழப்பெண் கவிதைகளில் எடுத்தாளப்பட்டன. வெறுமனே நிலாப் போலும் முகம் குயில் போன்ற குரல் என பெண்ணுக்கு உவமைகளாகும் நிலா தாமரை வர்க்கங்களிலிருந்து வேறுபட்டு புதிய உவமங்கள் பெண்களுக்காயின அதுவும் பெண்களின் குரல்களில்.

'நிரந்தரமாக்கப்பட்ட சகதிக்குள் கிடந்து
வெளியே எடுத்து வரப்பட்ட
ஒரு சிறிய கல்லைப் போன்று
நான்
என்னைக் கண்டெடுத்துள்ளேன்" 11

என்றும்

'ஒரு குட்டி நட்சத்திரத்தைப் போன்று
எனது இருத்தல் உறுதி பெற்றது" 12

என்றும்

'தூக்கியெறியப்பட முடியாத கேள்வியாய்
நான்
பிரசன்னமாயுள்ளேன்" 13

என்றும் பாடுகிறார் சிவரமணி.

பெண்கள் கவிதைகளிற் சொல்கின்ற செய்தி புதுமையானது. எனவே அதனைச் சொல்வதற்கு புதிய உவமைகள் அவசியமாகி விடுகின்றன என்பதையே மேற்காட்டப்பெற்ற கவிதையடிகள் எடுத்துரைக்கின்றன. இதனை,

'கல் நட்சத்திரம் கேள்வி ஆகிய உவமைகளின் பயன்பாடு மிக வித்தியாசமானது. தமிழ்க்கவிதை மரபில் உவமைகளின் தன்மையையும் பயன்பாட்டையும் நோக்கும் போது அவற்றிலிருந்து வேறுபட்ட ஒரு பயன்பாட்டை இங்கு கவனிக்கலாம். தன்னைத்தானே உணர்தலின் ஆழம் பெருமிதம் உறுதி ஆகியவற்றை இந்த உவமைகளின் மூலம் புலப்படுத்த முனைகிறார்" 14என்பர்ஆய்வாளர். இவ்வாறேதாம் படிமங்களும். 'கல்லாய் மாறிய பூ பாறையாய் இறுகிய காற்று பனியாய் உறைந்த நீர் "15 போன்ற புதிய படிமங்களை அதுவரை தமிழ்க்கவிதை உலகு அறியவில்லை.

கேள்வி கேட்கத் துணியாத சமுதாயங் குறித்துப் பாடும்பொழுது
'மந்தைகள் போல் எல்லாவற்றையும்
பழகிக் கொண்டனர்" 16

என பலராலும் பயன்படுத்தப்படும் உவமையைக் கையாளும் பெண்கள் பல இடங்களிலும் தம் கூர்த்த அவதானிப்புத் திறனால் வியப்படையச் செய்கிறார்கள். சமுதாயம் குறித்ததும் இயற்கை குறித்ததுமான அவர்களின் நுண்ணிய பார்வையிலிருந்து

'என்னருகே அம்மாவும்
கூட்டிலிருந்து தவறி விழுந்துவிட்ட
ஒரு அணில் குஞ்சைப் போல..." 17

'நீ என்னிடம் அன்புக்காக மண்டியிட்டாய்
கோரைப்புல்லிடம் மண்டியிடும் கும்பிடுதட்டான் போல்" 18

போன்ற புதிய உவமைகள் வந்து விழுகின்றன. சமுதாய மக்களைத் தம்பால் ஈர்க்கவென பெரும்பாலும் பிரசாரத் தன்மையுடன்

'சீறும் துப்பாக்கியின் பின்னால்
என் உடல்
சின்னாபின்னப்பட்டுப் போகலாம்
ஆனால்
என் உணர்வுகள் சிதையாது
உங்களைச் சிந்திக்க வைக்கும்..." 19

போன்றே எழுதப்பெற்றன பெண் போராளிகளின் கவிதைகள். வெளிப்படைத் தன்மையே அதிகம் மிக்க அப்போராளிக் கவிஞர் கவிதைகளிலும் 'புது விதையாய் முளை விடுவேன்..."20 ஆகிய அணிக் கையாட்சிகள் உள. எனினும் இக் கவிதைகளின் உணர்த்துமுறை உத்திபேரினவாதத்தின் கொடுமையை காட்சிப்படுத்தியும் பிறவாறும் காட்டுவதுதான். இதன்மூலம் அடக்குமுறையின் கொடுமையும் அதை எதிர்க்கும் வீரமும் வாசகர்க்குப் பலவாறு எடுத்துரைக்கப்படுகிறது.

**முரண்**

ஈழத்துப் பெண் கவிதைகளில் பெரிதும் கையாளப்பட்டுள்ள உத்திகளில் ஒன்றாக முரணும் விளங்குகின்றது. 'வாசகர் கவனத்தைக் கவர்வதற்கும் கருத்துக்கு அழுத்தம் கொடுப்பதற்கும் படைப்பாளியால் பயன்படுத்தப்படும் ஒரு உத்தி"யான 'முரண் மிகவும் முக்கியமானது. அடிப்படையானது. மனித உணர்வோடு சம்பந்தப்பட்டது." 21

இம் முரண் கையாளுகை தமிழ்க்கவிதைப் புலத்தில் 'ஆண்-பெண்" ஐக் கட்டமைத்துக் காட்ட சங்ககாலம் முதலாகப் பயின்று வந்துள்ளது. குறுந்தொகை பின்வருமாறு பாடுகிறது.

'நீரோ ரன்ன சாயல்
நீயோரன்ன என் உரன் அவித்தன்றே" 22

எனும் ஆண் குரலில் முரண் கையாளப்படுகின்றபோது ஐம்பூதங்களுள் எதிர் எதிர்த் தன்மையுள்ளவை எனக் கருதப்பெறும் நீர் தீ எனும் இரண்டும் முரண்களாக முன்னிறுத்தப்படுகின்றன. இவை இயல்பில் மாறுபாடு கொண்டுள்ள பெண்-ஆண் இருவரையும் வேறுபாடு தோன்ற எடுத்துரைக்கின்றன.

நீர்முரண்தீ
பெண்முரண் ஆண்

மேற்கண்டவாறு சங்கஇலக்கியத்தில் 'ஆண்குரல்" முரண் உத்தியை முன்னிலைப் படுத்தும்போது பெண்ணை மெல்லியல் நீராகவும் ஆணைத் தீயாகவும் எடுத்துரைத்த நிலைபோய் கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டு வித்தியாசத்தில் ஈழத்துப் பெண் கவிதைக்களத்தில் வேறுவிதமாக முரண் எடுத்தாளப்படுகின்றது.

'கனல் வாய்பிளந்து புழுதிபறக்கின்ற மைதானவெளி முழுதும் தீ மிதித்து"23 நடப்பவளாகவும் 'பூமிக் குழம்பெனக் கொதிக்கும் தழல் போல் சீறியெழுந்து

எரிமலையா"பவளாகவும் 24 பெண்ணானவள் கவிதையில் மாறியபின்பு 'நீர் - தீ" முரண் காலாவாதியாகிவிடுகிறது. ஆனால் இயல்பில் வேறுபாடுமிக்க பெண்ணுக்கும் ஆணுக்குமான முரணாக இன்று காட்டடப்படுபவை எவை என்பதற்கான பதில்கள் ஈழத்துப் பெண்கவிதைகளில் உள்ளன. முக்கியமான முரணாகக் காட்டடப்படுவது இவ்வுலகில் என்றும் பெரும்பாலும் சுகங்களை அனுபவிப்பவனாக ஆண் இருந்துகொண்டு சோகங்களைப் பெண்ணுக்கு வழங்கிவிடுவதுதான்.

'அன்றைய எனது மௌனமும்
இன்றைய உனது மௌனமும்
உனக்கே சாதகமானதில்
என்றென்றைக்கும்
வசந்தங்கள் உனக்கும்
சோகங்கள் எனக்குமாய் ..." 25

பெண்ணுக்கும் ஆணுக்குமான மற்றொரு முக்கிய முரணாக இருவர்தம் நோக்கு வேறுபாடு சுட்டப்பெறுகிறது. 'எனது அன்பினை உணர்த்தவே விரும்பினேன்" எனும் பெண் ஆணைப் பற்றிச் சுட்டும்போது

'அவர்கள்
எப்போதும் என்
உடலையே நோக்குவர்" 26

என்கிறாள். இந்த நோக்கு வேறுபாட்டையும் ஒரு முக்கிய முரணாக எடுத்து மொழிகின்றன ஈழத்துப் பெண் கவிதைகள்.

**தொன்மம்**

கலாசாரத் தொன்மங்களை - புராணப் பாத்திரங்களை கேள்விக்கு உட்படுத்துவதையும் தமது உரையாடலுக்கேற்ப மாற்றி மொழிவதனையும் பெண்கவிஞர்கள் தம் உத்திகளுள் ஒன்றாகப் பயன்படுத்தியுள்ளனர்.

'வாமனன் நானென நினைக்கும்
உமது எண்ணங்கள் யாவையும்
பொடிப் பொடியாக்குவேன்" 27

'குருஷேத்திரத்தில் கர்ணன் வீழ
ஐயோ மகனே என்று குந்தி
ஓடிச் சென்று அணைத்தாளே!
ஐயோ ராசா நான் பாவி" 28

என்பவை எடுத்துக்காட்டுகள் சில. வாசகஉலகம் ஏலவே அறிந்து வைத்திருக்கின்ற தொன்மக் கதாபாத்திரங்களை இவ்வாறு தமக்குக் குறியீடுகளாகவும் தம்மை அடக்கவிழையும் ஆண்களின் குறியீடுகளாகவும் சுட்டுகின்ற கவிதைகள் உண்மையில் ஈழப் புலத்தில் மிகப்பல. இத் தொன்மம் மற்றும் பிற உணர்த்துமுறை உத்திகள் குறித்த நோக்குகள் இன்னும் விரிக்கிற் பெருகும்.

**முடிவுரை**

தொகுத்து நோக்கும்பொழுது 'நான்- நீ' உரையாடல் உவமை உருவகம் படிமம் முரண் மொழிதல் தொன்மப் பயன்பாடு எனப் பல்வேறு உணர்த்து முறை உத்திகள் ஈழத்துப் பெண்கவிதைகளில் கையாளப்பட்டுள்ளன என்பதையும் தொடக்ககாலப் பெண் கவிதைகள் பெரும்பாலும் 'நான்- நீ' உரையாடல் கொண்டு வெளிப்படைத்தன்மை மிக்க கவிதைகளாக வெளிவந்தன என்பதையும் அறிய முடிகிறது. தம்மினத்து எதிர்ப்பாலாராகிய கணவன்-காதலனை முன்னிலையில் அழைத்துப்பேசிய கவிதைகள் பெரும்பான்னையின அடக்குமுறை ஆடவனை அவ்வாறு பேசுதலைத் தவிர்த்து கொடிய விலங்குகளால் உருவகப்படுத்தியுள்ளன. புதிய செய்திகளைப் பேசிய இக்கவிதைகள் அவற்றிற்கேற்ப புதிய உவமை உருவகம் படிமங்களைக் கண்டடைந்தன.

இவற்றுள் களமாடிய போராளிப் பெண்களுடைய கவிதைகள் சற்றே வேறுபட்டவை. அவர்கள் கவிதைகளில் தம் இனத்து எதிர்ப்பாலிணைக்கான 'சேதிகள்'' இல்லை. பெரும்பாலும் வெளிப்படையான அவை இராணுவ ஆடவனை எதிர்த்துக் களமாடிய துணிவின் உண்மைவரிகளாய் பேரினவாதத்தை நோக்கிய எதிர்ப்புக் குரல்களாய் போர்க்காலக் கவிதைப் பெருங்கடலில் சென்று சங்கமிக்கின்றன.

**சான்றெண் விளக்கம்**

1. சொல்லாத சேதிகள்1986யாழ்ப்பாணம்: பெண்கள் ஆய்வு வட்டம் ப.32.
2. பிரேமி மேலது ப.33.
3. கல்யாணி பெயல் மணக்கும் பொழுது2007 சென்னை:மாற்று ப. 70-71.
4. மைத்ரேயி சொல்லாத சேதிகள் மு.கு.நூ. ப.36.
5. தயாமதி பெயல் மணக்கும் பொழுது மு.கு.நூ. ப.136.
6. கீதா.வ.முன்னுரை பறத்தல் அதன் சுதந்திரம் 2001 சென்னை: காவ்யா ப.26.
7. ஆழியாள் மேலது ப.35ää36.
8. சுதாகினி பெயல் மணக்கும் பொழுது மு.கு.நூ. ப.13.
9. சந்திரவதனா ஷா மேலது ப. 95.
10. சமர்விழி மேலது ப.99.
11. சிவரமணி கவிதைகள்ää1993 பெண்கள் ஆய்வு வட்டம் ப. ஒஔi.
12. மேலது ப.ஒஔi.
13. மேலது ப.ஒஔi.
14. சித்ரலேகா மௌனகுரு சிவரமணியின் வாழ்வும் கவிதையும் மேலது ப..
15. சங்கரி சொல்லாத சேதிகள் மு.கு.நூ. ப.5.

*16. சிவரமணி கவிதைகள் மு.கு.நூ. ப.35.*

*17. ஊர்வசி பெயல் மணக்கும் பொழுது மு.கு.நூ. ப. 60.*

*18. சுல்பிகா மேலது ப.118.*

*19. வானதி இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்க் கவிதைகள் 2006 கொழும்பு: பூபாலசிங்கம் புத்தகசாலை ப. 398.*

*20. அம்புலி மேலது. ப.21.*

*21.சண்முகம் செ.வை. 2000 கவிதைமொழி ப.207.*

*22. குறுந்தொகை 95.*

*23. சொல்லாத சேதிகள் மு.கு.நூ. ப.34.*

*24. செல்வி பெயல் மணக்கும் பொழுது மு.கு.நூ. ப.128.*

*25. சொல்லாத சேதிகள் மு.கு.நூ. ப.34.*

*26. மேலது. ப.01.*

*27. செல்வி பெயல் மணக்கும் பொழுது மு.கு.நூ.ப. 127.*

*28. சன்மார்க்கா மேலது ப.100.*